REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 ஜனவரி 26 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 89 இல. 22 | January 26, Tuesday, 2021 | 16 பக்கங்கள் | 30/-




## பரந்த அறிவால் மக்களின் மனங்களை வளப்படுத்தியவர்

### எட்வின் ஆரியதாசவிற்கு ஜனாதிபதி இரங்கல்



ஊடகத் துறையின் சிறப்பான வளர்ச்சிக்கும், கலை மற்றும் பல்வேறு மானிடவியல் துறைகளின் முன்னேற்றத்திற்கும் பெரும் பங்காற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளரும் புலமை வாய்ந்த அறிஞருமான கலாகீர்த்தி கலாநிதி எட்வின் ஆரிய தாசவின் மறைவு ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது. பல்வேறு துறைகளில் அவர் கொண்டிருந்த பரந்த அறிவால் மக்களின் மனங்களை வளப்படுத்துவதற்கு அவர் செய்த பணிகளை நான் மிகுந்த கௌரவத்துடன்

06

இலங்கைக்கான மிச்சேலின் காலக்கெடு அறிக்கை;

## புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பின்னணியிலா என சந்தேகம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லேட் இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கைக்கு பின்னால் புலம்பெயர்ந்த தமிழர்கள் இருப்பதாக இலங்கை அர சாங்கம் நம்புகின்றது என வெளிவிவகார செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

கடந்த வருடங்களில் அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கைகளை விடவும் தற்போது அனுப்பிவைத்துள்ள அறிக்கை மிகவும் மோச மானதாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின்

06

## தடுப்பூசி வழங்கலுக்கான சகல ஏற்பாடுகளும் தயார் நிலையில்

### ஒத்திகை முன்னேற்பாடும் பூர்த்தி என்கிறார் இராணுவத் தளபதி



கொவிட் 19 தடுப்பூசிகள் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் அவற்றை களஞ்சியப்படுத்துவதற்கும் உரியவர்களுக்கு வழங்குவதற்குமான சகல ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட் டுள்ளன. இதற்கான ஒத்திகைகளும் நிறைவடைந்துள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தடுப்பூசி களை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியா கியுள்ளன. அத்தோடு ஒத்திகைகளும் நிறை வடைந்துள்ளன. எனவே,

06

ஒரு நாடு, ஒரு சட்டம் எனும் தேசிய அவசியத்தை நிறைவேற்ற அடித்தளம்;

# தனிப்பட்ட தலையீடுகளை செய்து நீதித்துறையை வளைக்க நாம் ஒருபோதும் முற்படவில்லை




### நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாக்க எமது அரசு அன்றும் இன்றும் தவறியது கிடையாது

### 'நீதிமன்ற இல்லம்' அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் மஹிந்த உரை



ஷம்ஸ் பாஹிம்

ஒரு நாடு, ஒரு சட்டம் எனும் தேசிய அவசியத்தை நிறைவேற்ற நாம் அடித்தளமிட்டுள்ளோம். அதற்காக பொருத்தமான சட்ட வரையறைகளை அமுல்படுத்துவதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.தமது அரசு ஆட்சிக்கு வந்த சகல சந்தர்ப்பங்களிலும் நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுத்ததாகவும் தனிப்பட்ட தலையீடுகளை செய்து நீதித் துறையை வளைக்க நாம் ஒரு

06



புகைப்பிடித்தல் மற்றும் மதுபாவனை

## கொவிட் 19 தடுப்பு மருந்தின் செயற்றிறனை குறைக்கலாம்



மர்லின் மரிக்கார்

கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பு மருந்து வழங்கப்படும் சூழலில் மது மற்றும் புகைப் பிடித்தலை குறைந்தது மூன்று மாதங்களுக்காவது தவிர்த்துக் கொள்ளுமாறு புகைப்பிடித் தல் மற்றும் மதுசாரம் தொடர் பான தேசிய அதிகார சபையின் தலைவர் டொக்டர் கலாநிதி சமாதி ராஜபக்ஷ நேற்று வேண் டுகோள் விடுத்துள்ளார். புகைப்பிடித்தல் மற்றும் மதுப் பாவனையானது கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பு மருந்தின் செயற்றிறனை உடலில்

06

## தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை 1000 ரூபாவாக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம்

தோட்டத்தொழிலாளர்களின் குறைந்த பட்ச நாளாந்த சம்பளத்தை சம்பள நிர்ணய சபையினூடாகவேணும் 1000 ரூபாவாக அதி கரிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜ ப க்ஷ தலைமையில் நேற்று (25) கூடிய அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்ப ளத்தை அதிகரிப்பது தொடர்பாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா முன் வைத்த அமைச்சரவை பத்திரம்தொடர்பாக கலந்துரையாடிய பின்னர் அமைச்சரவை இம்முடிவுக்கு வந்துள்ளது.

தற்போதைய அரசாங்கம் வழங்கிய வாக் குறுதி என்பதால் அதனை உடனடியாக நிறைவேற்றவேண்டுமென அமைச்சர்கள் சுட்டிக்காட்டிய நிலையில் அதற்கு ஜனாதி பதியும் ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருந்தோட்டத்துறையின் கூட்டு ஒப் பந்தத்திற்கு அமைய குறைந்தபட்ச சம் பளத்தை 1000 ரூபாவாக அதிகரிப்பதில் பிரச்சினை காணப்பட்டதோடு, தொழில்த ருநர் விரும்பாவிடில் சம்பள நிர்ணய சபை யினூடாக அம்முடிவை செயற்படுத்த முடி யுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நிதி அமைச்சின் முடிவினை பெற்றுக் கொடுப்பதற்கு ஒரு வார கால அவகாசம் கேட்டுள்ளதாக அறிந்த ஜனாதிபதி இந்த அமைச்சரவை கூட்டத்திலேயே அதனை அனுமதிக்க வேண்டுமென கூறியுள்ளார்.

அதன் பிரகாரம் சம்பள நிர்ணய சபை யினூடாகவேணும் தோட்டத்தொழி லாளர்களின் நாளாந்த குறைந்தபட்ச வேதனத்தை 1000 ரூபாவாக அதிகரிக்கும் முடிவுக்கு அமைச்சரவை இணக்கம் தெரி வித்துள்ளது.

SLPP பாராளுமன்ற உறுப்பினர்

## வசந்த யாப்பாவுக்கு கொரோனா உறுதி



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அவரது ஊடகச் செயலாளர் இதனை அறிவித்துள்ளதுடன் பாராளுமன்ற உறுப்பினர் கிசிச்சை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார்.

06

## வடக்கில் கைதான இந்திய மீனவருக்கு கொரோனா

### அதிர்ச்சியில் யாழ். சுகாதார பிரிவு



இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களில் ஒருவருக்கு கொரோனா

வேலணை பிரதேசத்தில் காணி சுவீகரிப்பு விவகாரம்;

## மறுபரிசீலனை செய்யுமாறு அங்கஜன் சம்பந்தப்பட்ட அமைச்சிடம் கோரிக்கை

### ஒருங்கிணைப்பு கூட்டத்திலும் பிரேரணை செய்யவுள்ளார்

சாவகச்சேரி விசேட நிருபர்



## ஒரு வருடத்திற்கு எந்த தேர்தலும் நடைபெறாது

### இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர

மாத்தறை நிருபர்



நாட்டில் நிலவும் கொரோனா தொற்று நெருக்கடி காரணமாக ஒரு வருடத்

## பாணந்துறை துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

மொறட்டுவ மத்திய விசேட நிருபர்



பாணந் துறை, பல்லே முல்ல பிர